# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அன்னூர்.

## O.S. No. 20 / 2025

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், செவ்வாய்க்கிழமை 03-ம் நாள் திருமதி.ஆவுடையம்மாள் என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. வெ.மோனிகா, பி.ஏ.,பி.எல்.,எல்.எல்.எம்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி, அன்னூர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆவுடையம்மாள் | வயது | 40 |
| க.பெ. | ராமசுப்பிரமணியம் | தாலூக்கா | அன்னூர் |
| கிராமம் | வெள்ளமடை | மாவட்டம் | கோவை |
| தேதி | 03.02.2026 | PW-1 | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி வங்கியின் வெள்ளமடை கிளை மேலாளர் ஆவேன். இந்த வழக்கில் என் தரப்பு சாட்சியத்தினை பொருத்து நான் எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலம் ஒன்று தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனவே, அதனை என் சாட்சியமாக ஏற்றுக் கொண்டு இதில் பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.04.2022 | கடன் விண்ணப்பம் – அசல். |
| வா.சா.ஆ.2 | 22.04.2022 | கடன் அனுமதி கடிதம் – அசல். |
| வா.சா.ஆ.3 | 22.04.2022 | Taken delivery letter to DPN – அசல். |
| வா.சா.ஆ.4 | 09.01.2025 | பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞரின் அறிவிப்பு – அலுவலக நகல். |
| வா.சா.ஆ.5 | 16.01.2025 | 1-ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை – அசல். |
| வா.சா.ஆ.6 | 15.01.2025 | 2-ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை – அசல். |
| வா.சா.ஆ.7 | | கணினி தரவிறக்கம் செய்யப்பட்ட கணக்குப்பட்டியல் – தரவிறக்க நகல். |

மேற்கண்ட என் சாட்சியத்தினை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur